வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

விலை ரூ. 30/=








Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 02.01.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 02 பக்கங்கள் : 08


# வடக்கு மக்களை காப்பாற்றும் கடமையில் இந்தியா கரிசனை

## விரைவாக மீண்டெழுவதற்கு இந்தியாவின் நேசக்கரத்தை இலங்கை பற்ற வேண்டும் என செல்வம் எம். பி. அறிவுரை

மன்னார், ஜனவரி. 02

இலங்கையில் ஏற்பட்ட பல்வேறு இடர்களின் போது இந்தியா முதன் முதலில் கரம் கொடுத்துள்ளது. குறிப்பாக, வடக்கு மக்களை காப்பாற்றும் தமது கடமையை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற



ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

07

தையிட்டி விகாரை சட்டவிரோத கட்டடம்:

## "அறிவித்தல் பலகை வைத்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்"

யாழ்ப்பாணம், ஜன. 02

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தீர்மானத்துக்கமைய தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரை முன்பாக சட்டவிரோத கட்டடம் என்று அறிவித்தல் பலகை நாட்டினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச சபை செயலாளருக்கு பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆளு

07

தையிட்டியில் போராட்டத்தில் ஈடுபட்ட

## 11 பிரதேச சபை உறுப்பினர்களுக்கு நீதிமன்றத்தால் அழைப்பு கட்டளை

யாழ்ப்பாணம், ஜன. 02

தையிட்டி திஸ்ஸ விகாராதிபதியின் பதவி உயர்வுக்கு எதிராக விகாரைக்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 11 உறுப்பினர்களுக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தால் அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பலாலி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கின்படி நீதிமன்ற பதிவாளரால் அழைப்பு கட்டளை

07

## தரமற்ற மருந்துகளால் நோயாளர் உயிரிழக்கும் அபாயம் நீடிக்கிறது

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜன. 02

தரமற்ற மருந்துகளால் நோயாளர்கள் உயிரிழந்தமையால் மருத்துவமனைக் கட்டமைப்பில் பணியாற்றும் மருத்துவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். நோயாளர்களுக்கான மருந்துகளைப் பரிந்துரைக்கும் போது அதன் தரம் தொடர்பில் இரு முறை சிந்திக்க வேண்டியுள்ளது. தரமற்ற மருந்துகளால் நோயாளர்களின் உயிருக்கு பாதுகாப்பற்ற நிலை உருவாகியுள்ளது- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

சுகாதார துறையில் எழுந்துள்ள

07

## பிரதேச சபை உறுப்பினரின் கணவன் குத்திக்கொலை!

### மருதங்கேணியில் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜன. 02

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் நேற்று கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். அதே பகுதியைச் சேர்ந்த எஸ். தவநேசன் (வயது-40) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று மாலை 5 மணியளவில் மருதங்கேணி வீரபத்திரர் கோவிலை அண்மித்த பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கத்திக்குத்துக்கு இலக்கானவர் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஜெனிற்றாவின்

07

## அரசின் செயல்பாடுகளால் மக்களுக்கு கடும்நெருக்கடி

### மக்கள் போராட்ட இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 02

அரசாங்கத்தின் அடக்குமுறை சட்டங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியம், இந்தியாவுக்குச் சார்பான பொருளாதாரக் கொள்கைகளால் 2026ஆம் ஆண்டிலும் நாட்டு மக்கள் சொல்லமுடியாத துயரங்களையே எதிர்கொள்ள நேரிடும் என மக்கள் போராட்ட இயக்கம் எச்சரித்துள்ளது.

மக்கள் போராட்ட இயக்கத்தால் விழிப்புணர்வு துண்டுப்பிரசுர விநியோகம் நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு

07

## எதிர்கால திட்டங்கள் குறித்து ரணில் - சஜித் ஆலோசனை

### புத்தாண்டில் புதிய அரசியல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 02

எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து ரணில் - சஜித் இருவரும் ஆலோசித்துள்ளனர்.

புத்தாண்டை முன்னிட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இதன்போது, சஜித் பிரேமதாஸவும் தனது அன்பான வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டதுடன், எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

இந்த வாழ்த்து பரிமாற்றமானது புத்தாண்டில் ஒரு புதிய அரசியல் ஆரம்பமாக அமையக்கூடும் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

### அரசிடம் எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 02

புத்தாண்டிலாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாக்குறுதியளித்த சகல நிவாரணங்களையும் உரிய முறையில் வழங்கி வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

07



## 22 வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு நிவாரணம்

கொழும்பு, ஜன. 02

டித்வா புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்காக 22 வெளிநாடுகளிலிருந்து மனிதாபிமான உதவிகள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் மனிதாபிமான உதவிகள் நாட்டுக்கு கிடைத்துள்ளதாக அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

07

## தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினராக இராணுவ அதிகாரி!

### எதிர்ப்பு தெரிவிக்காத சிறீதரன் எம். பி.?

கொழும்பு, ஜன. 02

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான வெற்றிடத்துக்கு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

அரசமைப்புக்கான 17 ஆவது



07

## எரிவாயுவின் விலை உயர்வு

கொழும்பு, ஜன. 02

நேற்று முதல் அமுலாகும் வகையில் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 12. 5 கிலோ கிராம் நிறையுடைய

07

## இணையவழி குற்றங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன

### 2025 இல் 12,650 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஜன. 02

2025 ஆம் ஆண்டில் நாட்டில் இணையவழி குற்றங்கள் தொடர்பில் 12, 650இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது.

இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் பொறியியலாளர் சாருக தமுனுபொல

07

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆலயங்களில் புதுவருட பூசைகள்

யாழ்ப்பாணம், ஜன. 02

யாழ். மறைமாவட்டத்துக் கான பிரதான புதுவருட நள் ளிரவு திருப்பலி யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத் தில் நேற்று ஒப்புக்கொடுக்கப் பட்டது.


யாழ். மறைமாவட்ட ஆயர் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட திருப்பலியில் பெருந்திரளான கத்தோலிக்க மக்கள் கலந்துகொண்டனர்.

நாட்டில் நிலவிய அனர்த் தங்கள் மற்றும் இயற்கை சீற் றங்களால் பாதிக்கப்பட்ட மக் களின் துயரில் பங்கெடுக்கும் வகையில், இம்முறை ஆடம்பர கொண்டாட்டங்களை தவிர்த்து எளிமையான முறையில் வழிபா டுகள் நடைபெற்றன.

இதன்போது, அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக் காக விசேட பிரார்த்தனை களும் இடம்பெற்றன.

யாழ் குடாநாட்டின் ஏனைய கத்தோலிக்க தேவாலயங்களி லும் நள்ளிரவு மற்றும் காலை நேர வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாடுகளை தொடர்ந்து புதுவருட வாழ்த்துகளையும் பகிர்ந்து கொண்டனர்.

வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தீபங்கள் ஏற்றி ஒளிமயமாக 2026 ஆங்கிலப் புத்தாண்டு



வரவேற்கப்பட்டது. நள்ளிரவு 12 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் தேரடியில் தீபங்கள் ஏற்றப்பட்டு ஆங்கிலப் புத் தாண்டு வரவேற்கப்பட்டது.

புதுவருடப்பிறப்பு நாளான நேற்று காலையில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் பெருமளவான அடியார்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை, வவுனியா - இறம்பைக்குளம் புனித அந் தோனியார் ஆலயத்தில் புதுவ ருட விசேட ஆராதனை நிகழ் வுகள் ஆலய பங்குத்தந்தை கிறிஸ்தோபர் அந்தோனிதாஸ் டலீமா தலைமையில் இடம் பெற்ற விசேட ஆராதனையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டதோடு விசேட வழிபாடு களும் இடம்பெற்றிருந்தது.

இதன் போது நா ற்றுக்கணக் கான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடு பட்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிர தான தேவாலயமான புனித திரேசாள் பேராலயத்தில் 2026 ஆம் ஆண்டினை வரவேற்று நள்ளிரவு ஆராதனைகள் இடம்பெற்றன. கிளிநொச்சி பங்குத் தந்தையின் தலைமையில் ஆராதனைகள் நடைபெற்றன.

இதன்போது இயற்கை அனர்த்தங்களிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்கவும் நாட் டில் நீடித்த அமைதி, மகிழ்ச்சி நிலவ விசேட பிரார்த்தனையும் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி புனித அந்தோ னியார் ஆலயத்தில், கிளிநொச்சி மறைக்கோட்ட குருமுதல்வர் கி. ஜெயக்குமார் தலைமையில் புதுவருட நள்ளிரவு ஆராதனை நடைபெற்றது. அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற புது வருட பூசை வழிபாடுகளில் பெருமளவானோர் கலந்து கொண்டதுடன், புதுவருட வாழ்த்துகளையும் பரிமாறிக் கொண்டனர். (அ)

# யாழ். மாநகர வரியிறுப்பாளர்க்கு ஆதனவரியில் சலுகை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 02

யாழ். மாநகர சபையின் வரி யிறுப்பாளர்கள் தமது ஆதனங் களுக்கான 2026ஆம் ஆண்டுக் கான ஆதனவரியை இந்த மாதம் 31ஆம் திகதிக்குள் செலுத்தி 10 சதவீத கழிவையும் காலாண்டுக் கான ஆதனவரியை அந்தக் காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5 சதவீத கழிவையும் பெறமுடியும் என்று யாழ். மாந கர முதல்வர் வி. மதிவதனி அறி வித்துள்ளார்.

இதன்படி, 2026 முழு ஆண் டுக்குமான வரியை எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் செலுத்தி 10 சதவீத கழிவை பெற முடியும். இதேபோன்று, முதலாவது காலாண்டு வரியை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிக்குள் செலுத்த வேண்டும். இந்த வரியை எதிர்வரும் 31ஆம் திக திக்குள் செலுத்தி 5 சதவீத கழி வையும் இரண்டாவது காலாண்டு வரிக்கான காலப்பகுதி ஏப்ரல் 01 முதல் ஜூன் 30ஆம் திகதிக் குள் செலுத்த வேண்டும். எனவே, ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் செலுத்தி 5 சதவீத கழிவை பெற முடியும்.

மூன்றாவது காலாண்டு வரிக்கான காலப்பகுதி ஜூலை 01 முதல் செப்ரெம்பர் 30ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டும். எனவே, ஜூலை 31ஆம் திகதிக் குள் செலுத்தி 5 சதவீத கழிவை யும் நான்காவது காலாண்டு வரிக்கான காலப்பகுதி ஒக்ரோ பர் 01 முதல் டிசெம்பர் 30ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டும். எனவே, ஒக்ரோபர் 31ஆம் திகதிக்குள் செலுத்தி 5 சதவீத கழிவை பெறமுடியும்.

மேலும், வரியிறுப்பாளர்க ளின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் தைப்பொங்கல் தவிர்ந்த பொது விடுமுறை நாட் களிலும் வார இறுதி நாட்களிலும் காலை 9 மணி தொடக்கம் பிற் பகல் 3 மணி வரையில் ஆதன வரியை செலுத்த ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான ஆதன வரி அறிவித்தல் கிடைக் கப் பெறாதவர்கள் இதற்கு முன் னைய ஆதனவரி அறிவித்தல் அல்லது ஆதன வரி செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டா ரம், வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விவரங்களை சமர்ப்பித்து ஆதன வரியை செலுத்தலாம்.

கடந்த கால ஆதனவரி நிலு வைகளையும் செலுத்துவதன் மூலம் சேவைகளையும் இலகு வாக பெற முடியும். 2025ஆம் ஆண்டின் ஆதனவரி பெறும தியிலும் கட்டணங்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்பட வில்லை.

2026ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்கள் முழு மையாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும், ஆதனவரி அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலக நாட் களில் அலுவலக நேரத்தில் யாழ். மாநகர சபையின் ஆதனவரி பகுதியுடன் தொடர்பு கொள் ளுமாறும் முதல்வர் அறிவித் துள்ளார். (ஐ)

# புனித பிலிப்பு ஆலயத்தில் புதுவருட பிறப்பு ஆராதனை

வடமராட்சி, ஜன. 02

வரலாற்று சிறப்புமிக்க செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் புதுவரு டப் பிறப்பு நள்ளிரவு ஆரா தனை நேற்று நடைபெற்றது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் திருப்பலி பூசை ஆரம்பமாகி நேற்று நள்ளிரவு 1.30 மணி வரை நடைபெற்றது.

இந்தத் திருப்பலியில் பொது மக்கள், வடமராட்சி கிழக்கு பகுதியில் இயங்கும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அருட்தந்தையினர், அருட்ச கோதரியினர், இளைஞர்கள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-02)



# பரதநாட்டிய அரங்கேற்றம்

கொழும்பு, ஜன. 02

நிருத்திய நர்த்தனாலயா நடன பள்ளியின் இயக்குநர் திருமதி சாந்தி கணேசராஜா வின் மாணவியும் இ. கோணேஸ் வரா - தயாளினி தம்பதியின் புதல்வியுமான அஸ்வினி கோணேஸ்வராவின் பரதநாட் டிய அரங்கேற்றம் நாளை சனிக் கிழமை மாலை 5:30 மணிக்கு பம்பலப்பிட்டி, புதிய கதிரே சன் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக கொழும்பு பல்கலைக் கழக மேலாண்மை மற்றும் நிதி பீட பீடாதிபதி பேராசிரியர் எச்.எம். நிஹால் ஹெனநாயக்க, கௌரவ விருந்தினராக திலகா நர்த்தனாலயா இயக்குநர் 'கலா பூஷணம்' யசோதரா விவேகா னந்தன், சிறப்பு விருந்தினராக கொழும்பு மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி ஈஷா ஸ்பெல்ட்விண்டே ஆகியோ ரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-02)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசக பெருவிழா இன்று

வடமராட்சி, ஜன. 02

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் திருவாசக விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல் வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெற்று, அங்கிருந்து, நடராஜர், நாயன்மார்களின் திருவுருவ சிலைகளுடன் திருவாசக ஏடுகளும் ஊர்வல மாக ஆச்சிரமத்துக்கு எடுத்து வரப்படும். இதன்போது, சிவபுராணமும் ஓதப்படும்.

ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெறும். இதில், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் தி. செல்வ மனோகரன் விசேட அருளுரை ஆற்றுவார். (ஐ-02)

# யாழ். நீதிமன்றில் சத்தியபிரமாணம்



யாழ்ப்பாணம், ஜன. 02

2026ஆம் ஆண்டின் முதல் நாள் அரசகரும பணிகள் புது வருட தினமான நேற்று ஆரம் பமாகின. யாழ்ப்பாணம் நீதி மன்ற வளாகத்திலும் தேசியக் கொடி ஏற்றலுடன் சத்திய பிர மாணம் எடுக்கப்பட்டு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற பதிவாளர் பாலசிங்கம் சரண்ராஜ் தலைமையில் நிகழ் வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். மாவட்ட முன் னாள் நீதிபதி ஜெ. கஜநிதி பாலன் கலந்து கொண்டி ருந்தார். (ஐ)

# கஞ்சாவுடன் 4 பேர் கைது

கொழும்பு, ஜன. 02

150 கிலோவுக்கும் அதிகள வான கஞ்சா போதைப் பொரு ளுடன் பொலநறுவை - ஹம் பேகமுவ - மீகஹகிவுல பகுதி யில் நபர் ஒருவர் கைது செய்யப் பட்டார்.

இதேநேரம் சுமார் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டி ருந்த 30 ஆயிரத்துக்கும் மேற் பட்ட கஞ்சா செடிகளுடன் சந் தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, 2,420 கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டிருந்த அரை ஏக்கர் நிலப்பரப்பை பிடித்த பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை கைது செய்தனர். (எ)

# வடக்கின் நான்கு மாவட்டங்களில் 25 வீதிகள் திருத்தப்படுகின்றன!

வவுனியா, ஜன. 02

வடக்கில் 25 வீதிக ளுக்கான திருத்தப் பணிகள் நேற்று ஆரம் பிக்கப்பட்டன என்று தேசிய மக்கள் சக்தி யின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ம. ஜெகதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.



தேசிய மக்கள் சக்தியின் வவுனியா பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப் பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் வீதி அபிவி ருத்தி பணிகள் ஆரம்பிக்கப்படு கின்றன. 2026ஆம் ஆண்டு அபி விருத்தி ஆண்டாக இருக்கும். யாழ்ப் பாணம் மாவட் டத்தில் 5 வீதிகளும் மன்னார் மாவட் டத்தில் 6 வீதிக ளும், வவுனியா மாவட்டத்தில் 8 வீதிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 வீதிகளும் திருத்தப்படுகின்றன.

இந்த ஆண்டு முழுவதுமே ஓர் அபிவிருத்திக்குரிய ஆண் டாக இருக்கும் என்பதில் எந்த வித ஐயமில்லை. அந்த வகை யில் பல்வேறுபட்ட செயல் திட்டங்களை அரசாங்கம் இந்த ஆண்டிலே நடத்தவுள்ளது - என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ஈழநாடு
02.01.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# இந்த ஆண்டின் இலக்குகள்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் இந்த ஆண்டுக்கான இலக்குகள் என்ன? நாடு மீட்பரைத் தேடும் முட்டுச்சந்தியொன்றில் நாட்டை ஜனாதிபதி அநுர குமார பொறுப்பெடுத்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலின்போது மும்முனைப் போட்டிகள் இருப்பதான தோற்றம் தெரிந்தாலும் இறுதியில் ஐம்பது விகித வாக்குகளைப் பெறாத ஒருவராகவே ஜனாதிபதி அநுர குமார ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்தபோது நாட்டின் மீட்பராக ரணில் விக்கிரமசிங்கவே காட்சியளித்தார். ரணிலே அனுபவம்மிக்கவர், அவர்தான் நாட்டை வழிநடத்தும் ஆற்றல் கொண்டவர் என்றவாறான பார்வையையே படித்த மத்தியதர வர்க்கத்திடம் இருந்தது. ஆனால், நாட்டின் பெரும்பான்மையான அடித்தள சிங்கள மக்களுடைய விருப்பமோ அநுர குமார திஸநாயக்கவாக இருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் இலங்கையின் வரலாற்றில் முதன் முறையாக கொழும்பின் உயரடுக்கினரின் விருப்பத்துக்கு மாறான ஒருவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். ஆரம்பத்தில் அநுரவுக்கு அனுபவம் இல்லை, வெளிவிவகாரக் கொள்கையைக் கையாளும் ஆற்றல் இல்லை என்றவாறான பார்வையே கொழும்பின் உயரடுக்கினர் மத்தியில் நிலவியது.

ஆனால், ஆங்கில புலமையுள்ள சர்வதேச அனுபவம் உள்ளவர்களாகத் தங்களைக் காண்பித்துக் கொண்டவர்களை விடவும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விடயங்களைக் கவனமாகவும் தூரநோக்குடனும்தான் இதுவரையில் நகர்த்தியிருக்கிறது. தமிழ் மக்களுடைய அரசியல் பிரச்னையில் முன்னைய ஆட்சியாளர்களின் நிலப்பாடுகளிலிருந்து இதுவரையில் தங்களை வேறுபடுத்திக் காண்பிக்கவில்லை என்பது உண்மை. ஆனால், தேசிய அளவில் மாறுபட்ட ஆட்சியாளர்களாகத் தங்களை அடையாளப் படுத்துவதில் சில முன்னேற்றங்களைக் காண்பித்திருப்பது உண்மைதான்.

இந்தநிலையில் இந்த ஆண்டில் எவ்வாறான மாற்றங்களை நாட்டின் அடிப்படையான அரசியல் கட்டமைப்பில் ஜனாதிபதி மேற்கொள்ளப் போகிறார்? அதற்கான வாய்ப்புகள் என்ன என்பது முக்கிய கேள்வியாகிறது. இந்த ஆண்டு புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதில் வெற்றி பெற்றால் அது, ஒரு முக்கிய அடைவாக இருக்கும். இதேபோன்று, பிற்போடப்பட்டுவந்த மாகாண சபைகள் தேர்தல் நடைபெற்றால் அதுவும் ஒரு முக்கிய அரசியல் மாற்றமாகப் பதிவாகும். இதனைத் தாண்டி,தேசிய மக்கள் சக்தி இந்த ஆண்டு எவ்வாறான அடைவுகளைச் சாத்தியப்படுத்த முடியும்?

மாற்றங்களை எதிர்பார்ப்பது சுலபமானாலும் அனைத்தையும் ஒரு சில மாதங்களில், வருடங்களில் நிகழ்த்திவிட முடியாது என்பது உண்மைதான். ஆனால், பாராளுமன்றப் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கும் அரசாங்கம் என்னும் வகையில் சில வரலாற்று மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான உள்ளார்ந்த ஆற்றலை தேசிய மக்கள் சக்தி கொண்டிருக்கிறது. 'மனமுண்டானால் இடமுண்டு' என்பதுபோல் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் முக்கியமாக ஜே. வி. பி.யின் உயர் பீடம் சில விடயங்களை செயல்படுத்துவதில் உண்மையான கரிசனை கொண்டால் நிச்சயம் அதனை முன்னெடுக்க முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அரசியல் தற்துணிவுதான் அனைத்துக்குமான அடிப்படை. இலங்கையின் மாற்றங்கள் இரண்டு தளங்களுடன் பின்னிப்பிணைந்திருக்கிறது. ஒன்று அரசியல் தளம் மற்றையது பௌத்த மதபீடம். இந்த இரண்டும் மாற்றங்களுக்காக கைகோத்தால்தான் உண்மையான மாற்றங்களைக் காணமுடியும். அவ்வாறான நிலைமை இன்னும் ஏற்பட்டமைக்கான சான்றுகள் இதுவரையில் தென்படவில்லை.

# உழைக்கும் மக்களின் உரிமைகள் உச்ச அளவில் பாதுகாக்கப்படும்

### புத்தாண்டு நிகழ்வில் சபாநாயகர் தெரிவிப்பு

*கொழும்பு, ஜன. 02*

உழைக்கும் மக்களின் உரிமைகள் உச்ச அளவில் பாதுகாக்கப்படும் என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

புத்தாண்டு கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு சபாநாயகர் தலைமையில் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது சபாநாயகர் மேலும் கூறுகையில், "ஒட்டு மொத்த நாட்டு மக்களும் புதிய மாற்றத்தை எதிர்பார்ப்பதால், 10ஆவது பாராளுமன்றத்துக்கு விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, வெளிப்படைத் தன்மையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பு அனைத்து பாராளுமன்ற பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருட காலப் பகுதியில் இது விடயத்தில் சாதகமான முன்னேற்றங்களைக் காண முடிந்துள்ளது. சமூக மேம்பாடு ஏற்படும் போது நியாயம் மற்றும் சமத்துவம் பாராளுமன்றத்தில் உள்ள சகல பணியாளர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்படும்.

பாராளுமன்ற பணியாளர்கள் உள்ளடங்கலான சகல உழைக்கும் மக்களின் உரிமைகளை அதியுச்ச அளவில் பாதுகாப்பதற்கும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் நான் தொடர்ந்தும் ஆதரவாக இருப்பேன்.

பாராளுமன்றத்தின் நிர்வாகத்தை வலுப்படுத்துவதன் மூலம் சிறந்த சேவையை தொடர்ந்து வழங்கும் ஊழியர்களாக மாறுவதற்கு புத்தாண்டில் தைரியம் கிடைக்க வேண்டும்."- என்றார். (எ)

# தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் பதவி விலகல்

*கொழும்பு, ஜன. 02*

தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் மஞ்சுளா விதானபத்திரண தனது பதவியிலிருந்து விலக தீர்மானித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய தரம் 6 ஆங்கில பாட நூல் தொடர்பான விசாரணை நிறைவடையும் வரை அவர் தமது பதவியிலிருந்து விலக



தீர்மானம் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பெண்கள் இருவர் உட்பட மூவர் தாக்கப்பட்டு கொலை

*கொழும்பு, ஜன. 02*

கேகாலை - மாவனெல்லை பகுதியில் இரு பெண்கள் உட்பட மூவர் ஆயுதமொன்றால் தாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டனர்.

119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

ஆயுதமொன்றால் தாக்கப்பட்ட நிலையில் காயமடைந்த மூவரும் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)

# கல்முனையில் இறைச்சிக்காக நாய்கள் கொலை

*கல்முனை, ஜன. 02*

நாய்களை கொன்று இறைச்சியை விற்பனை செய்ய முற்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பெரிய நீலாவணை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் ஏனைய இறைச்சி வகைகளில் கலந்து மக்களுக்கு விற்பனை செய்யும் நோக்கில் நாய்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பெரிய நீலாவணை பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு, சலிப்பு, கோபம் யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். புதியவர் நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. கோபத்தால் பகை உண்டாகும். உங்கள் திறமையை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**மிதுனம்**
தெளிவாக முடிவு விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும்.

**கடகம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது வைத்து மகிழ்வீர்கள். பெற்றோர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**சிம்மம்**
சந்தர்ப்ப சூழ்நிலையை சரியாக புரிந்துகொண்டு சமயோசிதமாக பேசும் சாமர்த்தியம் வரும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். சாதிக்கும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். வராது என்று இருந்த பணம் கைக்கு வரும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**விருட்சிகம்**
தன் பலம் பலவினத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.சொந்த பந்தங்கள் சுயரூபத்தை தெரிந்து கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பணப் பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**மீனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

# அந்தோனியார் ஆலயத்தில் புதுவருட ஆராதனை



வவுனியா, ஜன. 02

வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதுவருட விசேட ஆராதனை நிகழ்வுகள் நடைபெற்றன.

நள்ளிரவு 12 மணிக்கு ஆலயத்தின் பங்குத்தந்தை கிறிஸ்தோபர் அந்தோனிதாஸ் டலீமா தலைமையில் ஆரம்பமான விசேட ஆராதனையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதோடு விசேட வழிபாடுகளும் நடைபெற்றன.

இதன்போது, நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். (எ-10)

# வவுனியா- கல்லுமலை பிள்ளையார் ஆலய கட்டுமானத்துக்கும் நிதியை வழங்கமுடியும்

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க



வவுனியா, ஜன. 02

கதிர்காமத்தில் மூன்று இனத்தவர்களும் வழிபடுகிறார்கள் என்றும் கல்லுமலை பிள்ளையார் ஆலய கட்டுமானத்துக்கும் நிதியைப் பெற்றுக் கொடுக்கலாம் என்றும் கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சரும் வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

வவுனியா, சமணங்குளம்- கல்லுமலை பிள்ளையார் ஆலயத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் பௌத்த விகாரை கட்டப்படுவதாக வெளியான செய்தியை அடுத்து அங்கு தொல்பொருள் திணைக்களம், ஆலய நிர்வாகம், கிராம அபிவிருத்தி சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த சிரமதானப் பணியை மாவட்ட அரச அதிபர் பீ. ஏ. சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா. கமலதாசன் ஆகியோருடன் இணைந்து பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான நாடு. ஆலய பரிபாலன சபைக்கும் இந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கதிர்காமம் எல்லா மதத்தவர்களும் வழிபடும் தளம். தென் பகுதியில் எல்லோரும் அங்கு சென்று வழிபடுகிறார்கள். அதேபோல் மலைநாட்டிலும் பல இந்து மத ஆலயங்களில் எல்லோரும் வழிபடுகிறார்கள். கொழும்பு மாவட்டத்தில் அதிகமான இந்து ஆலயங்கள் உள்ளன.

மதத்தை வைத்து சிலர் அரசியல் செய்ய முற்படுகிறார்கள். ஆனால், இலங்கையில் அவ்வாறானதொரு அரசியல் தேவைப்படாது. மதம் என்பது ஒவ்வொருவரும் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு பின்பற்றுகின்ற ஒரு விடயம். இன, மதங்களை கொண்டு செய்யப்பட்ட அரசியல் தோற்கடிக்கப்பட்டு எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்யும் ஆட்சியே உருவாக்கப்பட்டுள்ளது.- என்றார். (எ-10)

# யாழில் அயல்வீட்டுக்காரரை கத்தியால் குத்திய பெண் கைது

யாழ்ப்பாணம், ஜன. 02

அயல்வீட்டுக்காரருடன் தொடர்ச்சியாக தகராறில் ஈடுபட்ட பெண்ணொருவர் அவரை கத்தியால் குத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ். புன்னாலைக்கட்டுவன் தெற்கு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு நெஞ்சில் கத்திக் குத்துக்கு இலக்காகிய நபர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் கத்திக் குத்து தாக்குதலை மேற்கொண்ட குறித்த பெண்ணை நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# ஆபத்தான வடமராட்சி கிழக்கு கடலில் யாரும் நீராடுவதற்கு இறங்கவேண்டாம்

## பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 02

வடமராட்சி கிழக்கு இந்து சமுத்திரத்தில் இறங்கி நீராட வேண்டாம் என்று பருத்தித் துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தெரிவித்துள்ளார்.

வடகீழ் பருவ மழை காலம் ஆரம்பிக்கப்பட்டு கடல் கொந்தளிப்புப்பாக காணப்படுவதாகவும் இதனால் உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும் சுற்றுலாப் பயணிகள் உட்பட வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு வருகைதருவோர் கடலில் இறங்கி நீராடவேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-எ)

# கறுப்பு பட்டி அணிந்து வந்த உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 02

தையிட்டி விகாரைக்கு எதிராக அமைதி வழிப் போராட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தமையை கண்டித்து வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியினரை தவிர ஏனைய உறுப்பினர்கள் கறுப்பு பட்டி அணிந்து சபை அமர்வில் கலந்து கொண்டனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே குறித்த சம்பவங்களை கண்டித்து, பொலிஸாரின் அடாவடிக்கு எதிர்ப்பு தெரிவித்து, உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்தவாறு சபை அமர்வில் கலந்து கொண்டனர்.- (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலற்ற வழியில் நடப்பதாலேயே அரசை கவிழ்ப்பதற்கு கதை பரப்பல்

## அமைச்சர் லால்காந்த கூறுகிறார்

கொழும்பு, ஜன. 02

ஊழல், மோசடியற்ற வழியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயணிப்பதாலேயே அதனை கவிழ்ப்பது தொடர்பில் தீய சக்திகள் கதை பரப்பி வருகின்றன என்று அமைச்சர் கேடி லால்காந்த தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஆட்சி அதிகாரத்தை இழந்து தவிக்கும் தரப்பினர் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார மேம்பாடு மற்றும் ஜனநாயக வழியிலான பயணம் தொடர்பில் கவலயடைந்துள்ளனர்.

அடுத்தவர்களின் உழைப்பை சுரண்டி சுகபோக வாழ்க்கை வாழ முடியாத நிலையும் காணப்படுகிறது. எனவே, எமது பயணத்தை குழப்புவதற்கு அந்தத் தரப்பினர் முயற்சிக்கின்றனர். இந்த நாசகார செயலுக்கு நாசகார ஊடகங்களும் துணை நிற்கின்றன.

மக்கள் ஆணைக்கு எதிராக செயல்பட்ட அரசாங்கங்களுக்கு மக்கள் தக்கபாடம் புகட்டினர். இதேபோல மக்களை குழப்பும் வகையில் செயல்படும் ஊடகங்களுக்கும் மக்கள் சிறந்த பதிலை வழங்குவார்கள்.

மக்கள் சக்திக்கு முன்னால் வேறு சக்திகள் தாக்கு பிடித்து நிற்க முடியாது. ஊழல், மோசடி அற்ற பயணம் காரணமாகவே தேசிய மக்கள் சக்திக்கு எதிராக சிலர் செயல்படுகின்றனர். அரசாங்கம் கவிழும் என்றெல்லாம் கதைகளை பரப்பி வருகின்றனர்." - என்றார் அமைச்சர்லால் காந்த. (ஐ)

# போதைப்பொருட்கள் பணத்துடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 02

115 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின், 23 கிராம் 700 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்பட்டதாகக் கருதப்படும் 5 இலட்சம் ரூபாய் பணத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை - தெவிநுவர பகுதியில் நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதானவர் அதே இடத்தைச் சேர்ந்த 38 வயது நபராவார்.

சந்தேகநபர்வெளிநாட்டில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் நெருங்கிய சகா என்றும் போதைப்பொருள் கடத்தல் மூலம் சந்தேகநபரின் சகாவுக்கு கிடைக்கும் பண விடயங்களை இவரே கையாள்பவர் எனவும் தெரிய வந்துள்ளது.

# சட்டவிரோதமாக பொருட்களை கொண்டு வந்த பெண் கைது!

கொழும்பு, ஜன. 02

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களுடன் வர்த்தக பெண் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஆவார்.

சந்தேக நபரான பெண் டுபாயில் இருந்து நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரான பெண் கொண்டு வந்த பயண பொதிகளில் இருந்து வாசனை திரவியங்கள், அழகுசாதனப் பொருட்கள், மடிக்கணனிகள் மற்றும் வெளிநாட்டு சிகரெட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி சுமார் 30 இலட்சம் ரூபாய் என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 02

போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

கட்டுநாயக்கா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து, 342 கிராம் 70 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 152 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் கம்பஹா - மினுவாங்கொடை பகுதியை சேர்ந்த 30 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# 460 பேர் கைது!

கொழும்பு, ஜன. 02

நாடு முழுவதும் நேற்று முன்தினம் பொலிஸார் முன்னெடுத்த நடவடிகைகளில் 460 பேர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில்மதுபோதை யில் வாகனம் செலுத்திய 59 பேரும் கவனக்குறைவாக 35 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3 ஆயிரத்து 971 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஐ)

# பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 02

மதுபோதையிலிருந்தவர் செலுத்திய கார் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் அம்பாந்தோட்டை - அம்பலாந்தோட்டை - வளவை கங்கை பாலம் அருகே உள்ள வீதி சோதனை சாவடியிலேயே இடம்பெற்றுள்ளது.

இதில் அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு, அம்பலாந்தோட்டை நோக்கி பயணித்த காரை நிறுத்துமாறு ஆணையிட்ட போதும், அதனை நிறுத்தாமல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது மோதியது. இதில், பொலிஸ் கான்ஸ்டபிள் எம். சரத் குமார என்பவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் கடமையில் இருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தப்பிச் சென்ற காரின் சாரதியும் அவருடன் பயணித்தவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது, இருவரும் மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டது. (ஐ)

# வெவ்வேறு விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஜன. 02

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

குருநாகல் - வாரியபொல பொலிஸ் பிரிவில் லொறி மோட்டார் சைக்கிளை மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

குருநாகலிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த லொறி எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதில், 44 வயதான ஒருவர் உயிரிழந்தார். லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மூதூர் பொலிஸ் பிரிவில் நீலபொலவிலிருந்து தெஹிவத்த நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர்த்திசையில் பயணித்த டிப்பர் லொறியுடன் மோதுண்டதில் ஒருவர் உயிரிழந்தார் இருவர் காயமடைந்தனர்.

இதில், தெஹிவத்த பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞரே உயிரிழந்தார். காயமடைந்தவர்கள் கிளிவெட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிலாபம் பொலிஸ் பிரிவில் ஆனமடுவவிலிருந்து பங்கதெனிய நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், அதேதிசையில் பயணித்த உழவு இயந்திரத்துடன் மோதுண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இதில், பங்கதெனிய பகுதியை சேர்ந்த 23 வயதுடையவரே உயிரிழந்தார்.

கம்பஹா - பேலியகொடை பொலிஸ் பிரிவில் லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதுண்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். பெண் ஒருவர் படுகாயமடைந்தார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு, மத்திய மாகாணங்களில் அடிக்கடி மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஜன. 02

கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அடிக்கடி மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் சுமார் 75 மில்லி மீற்றர் வரையான ஓரளவு பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பல இடங்களில் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மன்னார் தொடக்கம் புத்தளம் ஊடாக கொழும்பு வரையான அத்துடன் திருகோணமலை தொடக்கம் மட்டக்களப்பு ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை பெய்யக்கூடும்.

நாட்டை சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் வடதிசையில் இருந்து வடகிழக்குத் திசையை நோக்கி காற்று வீசும்.

பேருவளை தொடக்கம் காலி ஊடாக மாத்தறை வரையான அத்துடன் மட்டக்களப்பு தொடக்கம் பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக்கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# குற்றவாளிகள் யாராக இருந்தாலும் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்

## சிறிநேசன் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 02

வடக்கு அல்லது கிழக்கு என எந்தப் பிரதேசத்தில் யார் கைது செய்யப்பட்டாலும் அவர் கள் கடந்த காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செட்டிப்பாளையத்தில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: "முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கைதை எதிர்க்கட்சிகள் அரசியல் பழிவாங்கல் என்று கூறுவதை நாங்கள் ஏற்கவில்லை. கிழக்கில் நடந்த படுகொலைகள் மற்றும் கடத்தல் சம்பவங்களில் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியும். எனவே, இவ்வாறான சட்ட நடவடிக்கைகளை நாங்கள் ஒருபோதும் பழிவாங்கலாக கருதவில்லை"- என்றார்.

இதேவேளை, மட்டக்களப்பு



புக்கான ரயில் சேவை தற்போது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதை சுட்டிக்காட்டிய அவர், பயணிகளின் நலன் கருதி இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். (எ)

# இலஞ்ச குற்றச்சாட்டில் உப பொலிஸ் பரிசோதகர் கைது

கிண்ணியா, ஜன. 02

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிண்ணியா பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படை யிலேயே இந்தக் கைது நடடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ள நிலையில், ஏனைய சந்தேகநபர் களையும் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இலஞ்சமாக 10, 000 ரூபாயைக் கோரி, அதனை வேறொருவர் ஊடாகப் பெற்றுக் கொள்ள முயன்ற போதே குறித்த பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

கிண்ணியா பொலிஸ் நிலையத்தினுள் வைத்து நேற்று முன்தினம் மாலை 05. 20 மணியளவில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக் குழுவின் அதிகாரிகளால் இந்த உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# வாசல் கவிதை சஞ்சிகை வெளியீடு



திருகோணமலை, ஜன. 02

வாசல் கவிதை சஞ்சிகை வெளியீட்டு விழா திருகோணமலை மாநகர சபை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திருகோணமலை - சேனையூர் அனாமிகா கலை பண்பாட்டு மையத்தின் தலைவர் இரா. இரத்தினசிங்கம் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான நீங்களும் எழுதலாம் சஞ்சிகையின் ஆசிரியர் கவிஞர் எஸ். ஆர். தனபாலசிங்கம், கவிஞர் செ. ஞானராசா, கவிஞர் ஜெனீரா தௌபீக் ஹைறுல் அமான் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-04)

# தலவாக்கலை பிரதேச செயலக ஊழியர்கள் திடீர் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா, ஜன. 02

அலுவலகத்துக்கு விசாலமான கட்டடம் கோரி தலவாக்கலை பிரதேச செயலக ஊழியர்கள் திடீரென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்கள் அலுவலகத்தில் இடவசதி குறைவாக இருப்பதால் சேவைகளை பெற வருபவர்களும் அங்கு பணிபுரிபவர்களும் நாளாந்தம் கடுமையான அசௌகரியங்களையும் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்வதாக அந்த ஊழியர்கள் தெரிவித்தனர்.

தினமும் ஏராளமான மக்கள் இங்கு சேவைகளை பெற வருவதாகவும் இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான மக்கள் சிறிய மேல் தளத்துக்கு வரும் போது, சரியாக சுவாசிக்கக்கூட சிரமப்படுவதாகவும் இதனால் தங்கள் கடமைகளை சரியாக செய்ய முடியவில்லை என்றும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

முதியவர்கள், கர்ப்பவதி தாய்மார்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சேவைகளைப் பெற தங்கள் அலுவலகத்துக்கு வருவதாகவும் ஆனால், அலுவலகத்தில் இருக்கை மற்றும் மலசலகூட வசதிகள் இல்லாததால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாக ஊழியர்கள் தெரிவித்தனர். (எ)

# மட்டக்களப்பில் கோலாகலமாக வரவேற்கப்பட்ட புத்தாண்டு!



மட்டக்களப்பு, ஜன. 02

2026ஆம் ஆண்டு பிறப்பினை வரவேற்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று நள்ளிரவு விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு நகரில் நள்ளிரவு 12. 00 மணிக்கு பட்டாசுகள் கொளுத்தப்பட்டு, இளைஞர்கள் ஆடிப்பாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மாவட்டத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பெருமளவான பொதுமக்கள் இன, மத வேறுபாடுகளின்றி மட்டக்களப்பு நகரில் ஒன்றுகூடியதை காணமுடிந்தது.

சமீபத்தில் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக பலர் உயிரிழந்தும் சொத்துகளை இழந்தும் தவிக்கும் நிலையில் இம்முறை புத்தாண்டை அமைதியான முறையில் கொண்டாடுமாறு மாநகர முதல்வர் கோரிக்கை விடுத்திருந்தார்.

முதல்வரின் வேண்டுகோளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் நகருக்குள் ஒன்று கூடி மிகவும் அமைதியான முறையிலும் அதேநேரம் உற்சாகத்துடனும் புத்தாண்டை வரவேற்றனர்.

மட்டக்களப்பில் தற்போது சீரற்ற காலநிலை நிலவுகின்ற போதிலும் மழையைப் பொருட்படுத்தாது மக்கள் திரண்டு வந்து ஒருவருக்கொருவர் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர். (எ)

# புனித மரியாள் பேராலயத்தில் நள்ளிரவு புத்தாண்டு ஆராதனை

மட்டக்களப்பு, ஜன. 02

2026ஆம் ஆண்டு பிறப்பையொட்டி கிழக்கு மாகாணத்திலுள்ள தேவாலயங்களில் சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் நள்ளிரவு விசேட ஆராதனைகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான வழிபாட்டு நிகழ்வு மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்றது.

பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை ஜெமில்டன் தலைமையிலான அருட்தந்தையர்களால் இந்தப் புத்தாண்டு விசேட திருப்பலி பூஜைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

இந்த விசேட வழிபாட்டின் போது, நாட்டில் நீடித்த சமாதானமும் சாந்தியும் நிலவ வேண்



டுமென விசேட பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், அண்மைக்காலமாக பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாக்கவும் இறைவனிடம் வேண்டுதல் செய்யப்பட்டது.

புத்தாண்டு விசேட திருப்பலியை தொடர்ந்து, கலந்துகொண்ட பக்தர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதங்கள் வழங்கப்பட்டன.

மழையுடனான சீரற்ற காலநிலை நிலவியபோதிலும் மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெருமளவான மக்கள் இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்துகொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையவழி...

இது தொடர்பில் தெரிவிக்கையில்,

இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை சமூக ஊடகங்கள் ஊடாக இடம்பெற்ற இணையவழி குற்றங்களாகும். சமூக ஊடகங்களில் காணப்படும் போலி கணக்குகள் மற்றும் ஊடுருவப்பட்ட கணக்குகள் ஊடாக இந்த குற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால் நிதி மோசடிகள், பாலியல் துன்புறுத்தல்கள், ஆபாசமான விடயங்கள், பொதுமக்களையும் தனிநபர்களையும் பாதிக்கும் தவறான தகவல்களை பரப்புதல் ஆகிய குற்றங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன.

தொடர்பாடல், வர்த்தகம் மற்றும் நிதி நடவடிக்கைகளுக்காக பொதுமக்கள் டிஜிற்றல் தளங்களை சார்ந்திருப்பதை பயன்படுத்தி, சைபர் குற்றவாளிகள் மிகவும் அதிநவீன மற்றும் மோசடியான முறைகளை கையாளுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## அறிவித்தல்...

கைக்குட்பட்ட தையிட்டி பகுதியில் தனியார் காணியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையை சட்டவிரோத கட்டடம் என அடையாளப்படுத்தும் வகையில் அறிவித்தல் பலகையை மூன்று மொழிகளிலும் நாட்ட பிரதேச சபை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியது.

இது தொடர்பிலேயே பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அந்த கடிதத்தில், தையிட்டி விகாரைக்கு முன்பாக சட்டவிரோத கட்டடம் என்று அறிவித்தல் பலகை நடப்படப் போவதாக புலனாய்வுப் பிரிவு மூலம் தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறு அறிவித்தல் பலகையை காட்சிப்படுத்துவதன் மூலம் பௌத்தம் மற்றும் இந்து சமயத்துக்கு இடையிலான நல்லிணக்கத்தில் முரண்நிலை தோன்றுவதுடன் சமாதான சீர்குலைவு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. இவ்வாறான அறிவித்தல் பலகையை வலி. வடக்கு பிரதேச சபையோ, வேறு அமைப்புகள் மூலமோ, நிறுவனங்கள் மூலமோ காட்சிப்படுத்தும் நோக்கம் இருப்பின் அதை சட்டரீதியாக மேற்கொள்ளுமாறும் சட்ட ரீதியற்ற முறையில் அவ்வாறு அறிவித்தல் பலகையை நாட்ட நடவடிக்கை எடுத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறோம் - என்றுள்ளது.

இந்த விடயத்தை வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் விசேட அமர்வில் தவிசாளர் சோ. சுகிர்தன் வெளிப்படுத்தினார்.

இதன்படி, தனியார் காணிக்குள் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடம் என்ற வகையில் எமது பிரதேச சபையின் சட்ட ஆலோசகரின் ஆலோசனைப்படி அறிவித்தல் பலகை வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரை தொடர்பில் தென்னிலங்கையில் பரப்பப்படும் தவறான தகவல்கள் குறித்து சிங்கள மக்களுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்த சிங்கள பத்திரிகைகளில் விளம்பரங்களை பிரசுரிக்க வலி. வடக்கு பிரதேச சபையில் தீர்மானிக்கப்பட்டது.

தையிட்டி விகாரை காணி வரைபடங்களை தெளிவாக பிரசுரித்து விளம்பரங்களை வெளியிட சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. தையிட்டி விகாரையை உடைக்கப்போவதாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தவறான தகவல்களை சிங்கள ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவதாகவும் சபை அமர்வில் குற்றம்சாட்டப்பட்டது. (எ-03)

## நிவாரணங்களை...

டித்வா புயலால் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இறப்புகள் நடந்துள்ளன. பலர் காணாமல் போயுள்ளனர். இந்த விடயங்களை நாம் மறந்துவிடக் கூடாது. சில வாரங்களுக்கு முன்பு நடந்த துயர் மிகு நிலையை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் முன்னெடுக்கும் இந்த திட்டங்கள் அவசரகால நிவாரணத் திட்டங்கள் அல்ல. மாறாக அரச அதிகாரம் இல்லாமல் குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளாக நாம் இந்த மருத்துவமனை உபகரணங்களை நன்கொடையாக வழங்கி வருகிறோம். இந்த மகிழ்ச்சியான தருணத்தில், பாதிக்கப்பட்டவர்களும் வேலையில்லாமலும் வறுமையாலும் பாதிக்கப்பட்டவர்கள் காணப்படுகின்றனர். இவ்வாறு மௌனம் காத்திருக்கும் இந்த பெரும்பான்மையை நாம் மறந்துவிட்டுச் செயல்படக் கூடாது- என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், கேகாலை - கரவனெல்ல ஆதார மருத்துவமனைக்கு 28 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார். (எ)

## எரிவாயுவின்...

லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 150 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

12. 5 கிலோ கிராம் நிறையுடைய லாப்ஸ் சமையல் எரிவாயுவின் புதிய விலை 4,250 ரூபாயாகும்.

இதேநேரம், 5 கிலோ கிராம் நிறையுடைய லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 65 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 5 கிலோ கிராம் நிறையுடைய லாப்ஸ் சமையல் எரிவாயுவின் புதிய விலை 1,710 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (எ)

## அரசின்...

முன்பாக நடைபெற்றது.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அந்த இயக்கத்தின் தேசிய நிறைவேற்று சபை உறுப்பினர் வசந்த முதலிகே கூறுகையில்,

கடந்த 2025 ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு எந்த விதத்திலும் சுபமான ஆண்டாக அமையவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளால் மக்கள்மீது பெரும் வரிச்சுமை சுமத்தப்பட்டது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், சுகாதாரம் மாத்திரமன்றி பிள்ளைகளின் கல்வி உபகரணங்களுக்குக் கூட வரி விதிக்கப்பட்டு மக்கள் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

மறுபுறம், இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள இரகசிய உடன்படிக்கைகளின் ஊடாக நாட்டின் நிலப்பரப்புகளை இந்தியாவுக்குத் தாரைவார்க்க அரசாங்கம் முற்படுகிறது. குறிப்பாக, எந்தவித தரப்பரிசோதனைகளும் இன்றி இந்திய மருந்துகளை நாட்டுக்குள் இறக்குமதி செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது. ஏற்கனவே தரமற்ற மருந்துகளால் பல நோயாளர்கள் உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில், மீண்டும் அத்தகையதோர் அபாயகரமான சூழலே உருவாக்கப்பட்டுள்ளது.- என்றார். (எ)

## வடக்கு மக்களை...

அவர் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, இலங்கை தமிழ் அரசு கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று எங்களுடைய கோரிக்கையை முன்வைத்தோம். பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தலை நடத்தி, எல்லை நிர்ணயங்களை மேற்கொள்ளும் சூழலை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் முன்வைத்துள்ளோம்.

அதே நேரத்தில் பொருளாதார ரீதியில் இலங்கை வீழ்ச்சியடைந்தபோது தனது காலை இந்தியா பதித்தது. இயற்கை அனர்த்தத்தில் சிக்கி மக்கள் தவித்தபோதும் இந்தியா முதல்நாடாக தனது காலை பதித்துள்ளது. இலங்கையில் குறிப்பாக வடக்கு மக்களை காப்பாற்றுகின்ற தமது கடமையை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர்.

அந்த வகையில் ஜனாதிபதியிடம், குறிப்பாக பாராளுமன்றத்திலும் தெரிவித்திருந்தேன் இலங்கைக்கு அண்மையிலுள்ள நாடு இந்தியாவை பற்றிப்பிடியுங்கள்.

நேசக்கரம் நீட்டி, சமாதானத்துடன் இந்தியாவுடன் இணைந்து செயல்படுகின்ற ஒரு வாய்ப்பு வருகின்றபோதே நாம் இலங்கையை மீட்டெடுக்க முடியும் என்று கூறியிருந்தோம். அதனையும் நாங்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூறியிருந்தோம். இலங்கையில் ஏற்பட்ட இடர்களின் போது முதல் நாடாக இந்தியா உதவிகளை வழங்கிய பின்னரே ஏனைய நாடுகள் தமது அறிவிப்புகளை வெளியிட்டு உதவிகளை செய்தன."- என்றார். (எ)

## தரமற்ற மருந்...

நெருக்கடிகள் தொடர்பில் நேற்று முன்தினம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், மருந்துகளின் தரம் தொடர்பான கருத்துகளை அரச தரப்பு தவிர்த்து வருகிறது. பொறுப்புக் கூறலிலிருந்தும் விலகியுள்ளது. நாட்டிலிருந்து பெருமளவான மருத்துவர்கள் வெளியேறியுள்ள நிலையில் மருத்துவமனைகளிலும் பெரும் வெற்றிடம் உருவாகியுள்ளபோதும் மருத்துவர்களுக்கான நியமனங்களை வழங்குவதிலும் காலதாமதத்தை ஏற்படுத்தி வருகின்றனர். மருத்துவர் பற்றாக்குறை உள்ள போதும் சகல மருத்துவமனைகளிலும் நோயாளிகளைக் கருத்தில் கொண்டு சிகிச்சை சேவைகள் வழங்கப்படுகின்றன.

இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வாக மருத்துவர்களை நாட்டில் தக்கவைத்துக் கொள்ள "இலங்கை விசேட மருத்துவ சேவை" என்ற புதிய கட்டமைப்பை உருவாக்குமாறு நாம் முன்வைத்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இது தொடர்பான கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள் குறித்து ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சருடன் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. எனினும், செயல்பாட்டு ரீதியான எந்த முன்னேற்றங்களையும் காணவில்லை.- என்றார். (எ)

## 11 பிரதேச சபை...

அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி பிரதேச சபை உறுப்பினர்கள் 11 பேரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி தையிட்டி விகாரையின் முன்பாக விகாராதிபதியின் பதவி உயர்வுக்கு எதிராக வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்றையதினம் போராட்டத்தில் ஈடுபட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட 29 பேருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-03)

## பிரதேச சபை...

கணவன் என்றும் தெரிய வருகிறது. நபர் ஒருவர் மது போதையில் வீட்டுக்கு முன்னால் நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்ததாகவும் இந்த நிலையில் அவர் அங்கிருந்து வெளியேறி சென்றுவிட்டார் என்று கருதி மருதங்கேணி பகுதிக்கு சென்றபோது அவரை வழிமறித்து சந்தேகநபர் கத்தியால் குத்தி விட்டு தப்பிச் சென்றார் என்றும் தெரியவருகிறது.

கத்தி குத்துக்கு இலக்கான வரை மருதங்கேணி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதும் அவர் உயிரிழந்துவிட்டார். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-02)

## 22 வெளிநாடுகளிலிருந்து...

இந்த வெளிநாட்டு உதவிகளை முறையாக முகாமைத்துவம் செய்யவும் ஒருங்கிணைக்கவும் மற்றும் அவற்றை மக்களுக்கு வினைத்திறனுடன் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்யவும் ஜனாதிபதியால் வெளிநாட்டு நிவாரண ஒருங்கிணைப்புக்கான சிரேஷ்ட அதிகாரிகள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தலைமையிலான இந்தக் குழு, பல சந்தர்ப்பங்களில் ஒன்றுகூடி நிவாரண பணிகளில் முழுமையான வெளிப்படைத்தன்மை மற்றும் அதிகபட்ச வினைத்திறனை உறுதி செய்வதற்குத் தேவையான தீர்மானங்களை எடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, விமான நிலையம் மற்றும் துறைமுகங்கள் ஊடாக நாட்டுக்கு கிடைத்துள்ள வெளிநாட்டு உதவிகள் ஒருகொடவத்தை களஞ்சிய வளாகத்தில் பாதுகாப்பாகவும் முறையாகவும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிவாரணங்களை சரியான நேரத்தில் முறையாக வழங்குவதற்கான பொறிமுறையானது, தேசிய அனர்த்த நிவாரண சேவை மத்திய நிலையத்தின் ஊடாக தற்போது வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## தேசிய பொலிஸ்...

திருத்தத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் நீக்கப்பட்டு மீண்டும் 21 ஆம் திருத்தத்தின் ஊடாக நிறுவப்பட்ட தலைவர் உள்ளடங்கலாக எண்மர் அடங்கிய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிகளுக்கான இரண்டு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

அவ்வெற்றிடங்களில் ஒன்றுக்கு யாழ். மாவட்ட முன்னாள் கட்டளைத்தளபதியும் புனர்வாழ்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருமான மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் பெயர் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் பிரேரிக்கப்பட்டு, அரசமைப்புப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினராக மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியை நியமிப்பது குறித்து கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி அரசமைப்புப்பேரவையில் ஆராயப்பட்டதாகவும் அதற்கு சிவில் சமூகப்பிரதிநிதிகள் தமது ஆட்சேபனையை வெளிப்படுத்தியதாகவும் அறியமுடிகின்றது. பேரவையில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலாநிதி பிரதாப் இராமானுஜம், கலாநிதி டில்ருக்ஷி அனுலா விஜேசுந்தர மற்றும் கலாநிதி டினேஷா சமரரத்ன ஆகிய மூவர் அங்கம் வகிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து பேரவையின் தலைவர் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவால் ஏனைய உறுப்பினர்களிடம் அபிப்பிராயம் கோரப்பட்டபோது பிரதமர் ஹரிணி அமரசூரிய, ஆளுந்தரப்பின் பிரதிநிதி அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஜனாதிபதியின் பிரதிநிதி அபூபக்கர் ஆதம்பாவா எம்.பி., எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, அவரது பிரதிநிதி அஜித் பி. பெரேரா மற்றும் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதி எஸ். சிறீதரன் எம். பி. ஆகியோர் இதற்கு ஆட்சேபனை வெளியிடாததை அடுத்து, அந்த நியமனம் வாக்கெடுப்பின்றி உறுதிசெய்யப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவ வர்க்கத்துக்கே அரசு முக்கியத்துவம் அளிக்கிறது

### திஸ்ஸ விதாரண சாடல்

கொழும்பு, ஜன. 02

தற்போதைய அரசாங்கம் சாதாரண மக்களின் பிரச்னைகளை விடுத்து முதலாளித்துவ வர்க்கத்துக்கே முக்கியத்துவம் அளிக்கிறது என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு - பொரளையில் அமைந்துள்ள என். எம். பெரேரா மத்திய நிலையத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போதைய அரசாங்கம் முதலாளித்துவ முறையையே தொடர்ந்து பின்பற்றி வருகிறது. இதில் எவ்வித மாற்றமும் இல்லை. சாதாரண மக்கள் மீது மறைமுக வரிகள் மற்றும் வற் வரி பெரும் சுமையாக சுமத்தப்பட்டுள்ள நிலையில் வரி செலுத்தக்கூடிய வசதி படைத்தவர்களிடம் முறையான வரி வசூலிக்கப்படுவதில்லை.

இந்தச் சூழல் சமூகத்தில் பெரும் அநீதியை உருவாக்கியிருக்கிறது. இதற்கு எதிராக லங்கா சமசமாஜ கட்சி என்ற ரீதியில் முழுமையாக போராடப் போகிறது. நாட்டில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதோடு, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுப்பாடின்றி உயர்ந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் 30 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் வறுமையில் வாடுவதால் அவர்களின் தேவைகளுக்கு அரசாங்கம் விசேட முன்னுரிமை அளிக்கவேண்டும். இதனிடையே, இளைஞர்கள் மத்தியில் மீண்டும் சோசலிச மற்றும் இடதுசாரி கொள்கைகள்மீதான ஆர்வம் அதிகரித்து வருவது சிறந்த மாற்றம்.

ஒரு சரியான இடதுசாரி அரசாங்கமே நாட்டுக்குத் தேவை. தற்போதைய அரசாங்கம் சாதாரண மக்களின் பிரச்னைகளை விடுத்து முதலாளித்துவ வர்க்கத்துக்கே முக்கியத்துவம் அளிக்கிறது. ஒப்பந்தங்கள் மூலம் அமெரிக்க இராணுவம் நாட்டுக்குள் நுழைவது இலங்கையின் இறையாண்மைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும். "சோபா" மற்றும் எம்.சி.சி. போன்ற உடன்படிக்கைகள் நாட்டின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்பதால் வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு பணியாமல் ஒரு சுதந்திரமான நாடாக இலங்கை செயல்படவேண்டும் - என்றார். (ஐ)

## வெடிகுண்டு மிரட்டல்கள், விசாரணைகள் ஆரம்பம்

### அரசாங்கம் அறிவிப்பு



கொழும்பு, ஜன. 02

அரச நிறுவனங்கள் சிலவற்றுக்கு விடுக்கப்பட்ட குண்டு மிரட்டல்கள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் துள்ளார்.

குண்டு மிரட்டல்கள் குறித்த மின்னஞ்சல்கள் கண்டி மாவட்ட செயலகம், பூஜாப்பிட்டி, நாவலப்பிட்டி, பஸ்பாகே கோரல பிரதேச செயலகங்கள் இவற்றுடன் கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி கட்டார் எயார்வேஸ் விமானம் ஆகியவற்றுக்கு விடுக்கப்பட்டிருந்தன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டில் பொது அமைதியின்மையை ஏற்படுத்தும் முயற்சியாக சந்தேகிக்கப்படும் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவித்தார். (ஐ)

## அரிசி ஆலை உரிமையாளர்க்கு சலுகை வட்டியில் கடன் திட்டம்!

கொழும்பு, ஜன. 02

நெல் விவசாயிகளுக்கு நியாயமான விலையை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பெரும்போக நெல் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

இதன்படி, இந்த கடன் திட்டத்தின் இலக்கு குழுக்கள், சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் - அதிகபட்சமாக 25 மெற்றிக் தொன் தின சரி நெல் திறன் கொண்ட கூட்டுறவு சங்கங்கள் ஆகும்.

அனைத்து கடன் விண்ணப்பதாரர்களும் தொடர்புடைய அரசு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட செல்லுபடியாகும் வணிக பதிவு சான்றிதழ் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையால் வழங்கப்பட்ட உரிமத்தை வைத்திருக்க வேண்டும்.

கடன் திட்டத்தின் கீழ், அவர்கள் 7 சதவீத வருடாந்த வட்டி விகிதத்தில் 5 கோடி ரூபாய் வரை கடனை பெற முடிவதுடன், குறித்த கடன் தொகையை 180 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி , பிரதேச அபிவிருத்தி வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி. எவ். சி. சி. வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, அமானா வங்கி, கார்கில்ஸ் வங்கி, பான் ஏசியா வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி ஆகியவை ஊடாக இந்தக் கடன்களை பெறமுடியும். இந்தக் கடன் திட்டத்தின் ஊடாக மொத்தம் ஆயிரம் கோடி ரூபாய் நிதியை விடுவிக்க எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## 15 வயது சிறுமி வன்புணர்வு இளைஞரும் தாயாரும் கைது

கொழும்பு, ஜன. 02

15 வயது சிறுமியை வன்புணர்ந்த இளைஞர், இதற்கு உடந்தையாக இருந்த இளைஞரின் தாயும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொஸ்லாந்தை - கலிபனா பகுதியை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைதான இளைஞர் குறித்த சிறுமியுடன் காதல் உறவில் இருந்தார் என்றும் அவரை 3 மாதங்களுக்கு முன்னர் கொழும்புக்கு அழைத்துச் சென்றிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

இந்த விடயம் பற்றி இளைஞரின் தாய் அறிந்திருந்த போதிலும் பொலிஸாருக்கு தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்தே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வெளிநாட்டு சிகரெட்களுடன் கட்டுநாயக்காவில் தம்பதி கைது

கொழும்பு, ஜன. 02

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்களுடன் தம்பதியரை கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பை சேர்ந்தவ 24 வயது நபர்களாவர்.

கணவனும் மனைவியும் டுபாயில் இருந்து நேற்று கட்டுநாயக்காவை வந்தடைந்தனர். அவர்கள் சோதனை முடிவடைந்து வெளியேறியபோதே மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது, கணவனும் மனைவியும் கொண்டு வந்த பயணப்பொதிகளில் இருந்து 35 ஆயிரம் சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்களின் மொத்த பெறுமதி 52 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## அரசமைப்பு பேரவையை கட்சி மயப்படுத்தக்கூடாது

### உதயகம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, ஜன. 02

இதுவரையான காலத்தில் ஆட்சியில் இருந்த எந்தவொரு ஜனாதிபதியும் அரசமைப்பு பேரவையை கட்சியின் தீர்மானித்துக்கு அடிபணிய வைக்க முயற்சிக்கவில்லை. ஜனாதிபதியின் செயல்பாடுகள் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தனது கட்சியின் தலைமை பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனது கட்சி முகவரை கணக்காய்வாளர் நாயகமாக நியமிப்பதற்காகவே கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஒருவரை நியமிக்காமல் ஜனாதிபதி இழுத்தடிப்பு செய்கிறார். அரசமைப்பு பேரவையின் 3 சிவில் பிரதிநிதிகளின் பதவிக்காலம் வெள்ளிக்கிழமை (இன்றுடன்) முடிவடைகிறது.

இதன் பின்னர் ஜனாதிபதி புதிய ஒருவரின் பெயரை பேரவைக்கு பரிந்துரைக்கலாம், அதற்கு அரச மைப்பு பேரவை அனுமதியளிக்கலாம்.

பிரதமரின் பரிந்துரை தேசிய மக்கள் சக்தி உறுப்பினராக காணப்பட்டால் அரசமைப்பு பேரவையின் பெரும்பான்மை பலம் அரசாங்கம் பக்கமே இருக்கும். ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு அமைவாகவே உயர் நியமனங்கள் வழங்கப்படும்.

பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒன்றிணைந்து நியமனத்துக்கான பரிந்துரை களை முன்வைக்க வேண்டும் என்ற அரசமைப்பு ஏற்பாட்டை முறையாக செயல்படுத்தினால் தேசிய மக்கள் சக்தியின் முகவர்கள் அரசமைப்பு பேரவைக்குள் நுழையமாட்டார்கள்.

நாட்டுக்கு சிறந்த முறையில் சேவையாற்றிய மற்றும் சுயாதீனமாக செயலாற்றியவர்கள் என்று நம்பிக்கை கொள்ளும் மூவரின் பெயரை பிரதமர் பரிந்துரைக்கும் வரை பிரதமர் தனித்து பரிந்துரைக்கும் பெயர் பரிந்துரையை எதிர்க்கட்சித் தலைவர் நிராகரிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வெளிநாடு செல்வதற்கு தடை

கொழும்பு, ஜன. 02


பொலிஸாரால் தேடப்பட்டு வரும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டாவுக்கு வெளிநாட்டு பயணத் தடை விதித்து வத்தளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லங்கா சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி உட்பட பல வாகனங்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜொஹான் பெர்னாண்டோ பொலிஸ் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைதுசெய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பொலிஸாரிடமிருந்து தலைமறைவாக இருப்பதால் அவருக்கு எதிராக வெளிநாட்டு பயணத் தடை விதித்து நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி திஸநாயக்கா தலதா மாளிகை விஜயம்



கண்டி, ஜன. 02

புத்தாண்டை முன்னிட்டு தலதா மாளிகைக்கு நேற்றைய தினம் சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றார்.

இதன்போது, ஜனாதிபதி தலதா மாளிகை ளாகத்தில் நடைபெற்ற மத வழிபாடுகளில் பங்கேற்றதோடு அங்கு வழிபாட்டுக்கு வந்த மக்களுடனும் அளவளாவினார்.

தொடர்ந்து, மல்வத்து விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, மல்வத்து மகாநாயக்க தேரர் திப்பெட்டுவாவே சிறீ சுமங்கல தேரரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்னர், அஸ்கிரி மகா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, அஸ்கிரி மகா விகாரையின் மகாநாயக்க தேரர் வரகாகொட சிறீ ஞானரதன தேரரை சந்தித்து கலந்துரையாடினார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, பாராளுமன்ற உறுப்பினர் தனுர திஸநாயக்க ஆகியோரும் ஜனாதிபதியுடன் உடனிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால்02.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.